17



DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 411-2025

Deposition of Witness for D.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஆனந்த குமார் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | கருப்பசாமி | **தொழில்** | : | Mrg. |
| **ஊர்** | : | Srivilliputtur | **வயது** | : | 38 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் கரூர் வைசியா வங்கி, திருவில்லிபுத்தூர் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. எங்கள் வங்கியில் ராஜா என்பவர் சேமிப்பு கணக்கு எண்.1804010000000121 வைத்துள்ளார். அவருடைய 20.08.2024 முதல் 04.09.2024 வரைக்கான வங்கி கணக்கு பட்டியலை சமர்ப்பிக்கிறேன். அது **<u>சா.சா.ஆ.1</u>** ஆகும். அந்த வங்கிக் கணக்கானது 21.06.2024 அன்று துவங்கப்பட்டது. 000145, 000146 மற்றும் 000147 ஆகிய எண்கள் கொண்ட காசோலைகள் எந்த தேதியில் வசூலுக்கு வந்தது என்றால் அந்த காசோலைகள் இது நாள் வரை அந்த வங்கி கணக்கில் வசூலுக்கு வரவில்லை. மேற்சொன்ன வங்கி கணக்கு இது நாள் வரை செயல்பாட்டில் உள்ளது. மேற்படி கணக்கின் வாடிக்கையாளருக்கு எங்கள் வங்கியில் நடப்பு கணக்கு ஏதும் உண்டா என்றால் அந்த விபரம் குறித்து நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடாததால் அது பற்றி சாட்சி சொல்ல இயலாது.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

பு.சா.ஆ.1 காசோலை எதிரிக்கு எங்கள் வங்கியால் கொடுக்கப்பட்ட காசோலை என்றால் எங்கள் வங்கியில் வழங்கப்பட்ட காசோலை ஆகும். சா.சா.ஆ.1 ல் உள்ள வங்கி கணக்கும் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள வங்கிக் கணக்கும் வெவ்வேறானவை. பு.சா.ஆ.2 திருப்புதல் குறிப்பாணை எங்கள் வங்கியால் வழங்கப்பட்டது அல்ல. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவால் வழங்கப்பட்டது. பு.சா.ஆ.2 திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.1 காசோலைக்கானது என்றால் திருப்புதல் குறிப்பாணையில் பு.சா.ஆ.1 காசோலை எண் மற்றும் கரூர் வைசியா வங்கி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பு.சா.ஆ.1 காசோலையில் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கு எண்.180411500000 2556 ற்கான கணக்கு பட்டியலை எடுத்து வரவில்லை என்றால் நீதிமன்ற அழைப்பாணையில் அவ்வாறு எடுத்து வரச் சொல்லவில்லை. பு.சா.ஆ.1 காசோலை வழங்கப்பட்ட வங்கி கணக்கு முடிக்கப்பட்டதால்

R. Ananrg

அந்த காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் அந்த காசோலை குறித்து ஆவணங்கள் ஏதும் நான் எடுத்து வரவில்லை.

K. Anand
emp.ID - 012463
KVB, Srivilliputhur.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

24/2/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.